**செய்தி வெளியீடு எண்: 080** **நாள்: 31.01.2019**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு அம்மா அவர்களின் 65, 66, 67, 68, 69, 70ஆம் பிறந்தநாள் ஆண்டுதோறும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், பிப்ரவரி மாதம் முழுவதும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடத்தியும் ஆய்வு மற்றும் அரிய நூல்களை வெளியிட்டும் மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தியும் தமிழ்த்தாய் தமிழாய்வுப் பெருவிழாவாக நடத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இவ்வாண்டும் 2019 பிப்ரவரி மாதம் முழுவதும் தமிழ்த்தாய் 71 தமிழாய்வுப் பெருவிழா நடைபெறுகின்றது. இதன் தொடக்க விழா நிகழ்ச்சி பிப்ரவரி 1ஆம் தேதி, காலை 10.30 மணிக்கு தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பேரறிஞர் அண்ணா கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற உள்ளது. இந்நிகழ்விற்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் (மு.கூ.பொ.) முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமை தாங்குகிறார்.

பேராசிரியர் முனைவர் பா. இராசா அவர்கள் முன்னிலை வகிக்கிறார். முனைவர் பெ. செல்வக்குமார் அவர்கள் வரவேற்புரை ஆற்றுகிறார்.

விழாவினை, **மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு தொல்லியல் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமான திரு. க. பாண்டியராஜன் அவர்கள் தொடங்கி வைத்து பேருரையாற்றுகிறார்.**

**தென்சென்னை தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் முதுநிலை மருத்துவர் ஜெ. ஜெயவர்தன் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.**

**விழாவின் நோக்கத்தையும், செயற்பாட்டையும் குறித்து தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுசெயலர் திரு. இரா. வெங்கடேசன் இ.ஆ.ப., அவர்கள் கருத்துரையாற்றுகிறார்.**

நிகழ்வில், முனைவர் பால ரமணி, மருதூர் அரங்கராசன், முனைவர் ஒப்பிலா மதிவாணன், முனைவர் இரா. பஞ்சவர்ணம், முனைவர் பெ. மாதையன், மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், முனைவர் கோ. பெரியண்ணன், கவிஞர் கூரம் மு. துரை, முனைவர் மா. பாரதி சுகுமாரன் ஆகியோ ர் நோக்கவுரையாற்றுகிறார்கள். விழா நிறைவில், முனைவர் வி.இரா. பவித்ரா அவர்கள் நன்றியுரை ஆற்றுகிறார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**